**தேதி :** 23.02.2026 **SC.No. :** 486/2024 PW :1 ஜெயக்குமார்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரி நாகராஜ் எனக்கு தரவேண்டிய தொகைக்கு காவல்நிலையத்தில் புகார் மனு நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். 12ம் தேதி, இரவு 09.30 மணிக்கு எதிரி நாகராஜிடம் நான் பணத்தை கேட்ட விபரம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு தெரியுமா? என்றால் தெரியாது. சாட்சி கண்ணன் வீடு என்னுடைய வீட்டிலிருந்து 2 வீடு தள்ளி உள்ளது. சாட்சி ஆரோக்கியம் வீடு சுமார் 20 வீடுகள் தள்ளி உள்ளது. எதிரி நாகராஜ் வீடு சுமார் 30 வீடுகள் தள்ளி உள்ளது. எதிரி நாகராஜ் பொருட்கள் வாங்குவதற்கு அல்லது பஸ் ஏற வேண்டும் என்றால் என்னுடைய வீடு வழியாக வரவேண்டும் என்றால் சரிதான்.

என்னுடைய வீடு இருக்கும் தெருவில் குடியிருக்கும் நபர்கள் அனைவரும் நாடார் சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரிகள் முடி திருத்தும் சமுதாயத்தை சேர்ந்தவர்கள். எங்கள் ஊரில் எதிரி சமுதாயத்தினர் 3 குடும்பம் இருந்தது. தற்போது ஒரு குடும்பம் வெளியூர் சென்று விட்டார்கள். அவர்கள் சொத்துக்களை விற்று விட்டு சென்றார்கள். அவ்வாறு சொத்துக்களை விற்று விட்டு சென்றவர் ராஜேந்திரன் என்றால் சரிதான். ராஜேந்திரன் என்பவரிடம் நான் சண்டை போட்டு பிரச்சனை செய்ததினால் அவர் வீட்டை விட்டு சென்றார் என்றால் சரியல்ல.

என் மீது 3 வழக்குகள் நிலுவையில் உள்ளது. என் மீது 8 வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. எதிரி நாகராஜ் சம்பவநாள் கொசுவர்த்தி வாங்குவதற்காக என்னுடைய வீட்டு பக்கமாக சென்று கொண்டிருந்தபோது, நானும், ஆரோக்கியம், கண்ணன் ஆகியோர்கள் மது அருந்தி விட்டு அவரிடம் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. 108 ஆம்புலன்ஸை யார் அழைத்தார்கள் என்று எனக்கு தெரியாது, மறுநாள் தெரிந்து கொண்டேன். அரிவாள் வெட்டு பட்ட பிறகு எனக்கு இரத்தம் வெளியேறி நினைவிழந்தேன்.

என்னை ஆரோக்கியம் இரத்தத்தை துடைத்து தண்ணீர் தந்ததாக நான் கேள்விபட்டேன். என்னுடைய உடம்பில் இரத்தம் பட்டிருந்தது என்றால் சரிதான். ஆய்வாளரிடம் என்னுடைய ஆடையை கொடுத்தேனா? என்றால் எனக்கு தெரியாது. எதிரி நாகராஜ் இரண்டு கைகளினாலும் எந்த பொருளையும் பிடிக்க முடியாமல் செயல் இழந்தவர் என்றால் சரியல்ல. நானும், ஆரோக்கியம், கண்ணன் ஆகியோர்கள் எங்கள் தெருவில் எதிரி சமுதாயத்தினர் எவ்வாறு வரலாம் என்று கூறி, எதிரி நாகராஜையும், ரமேஷையும் அடித்தோம் என்றால் சரியல்ல. எதிரி நாகராஜிற்கும், ரமேஷிற்கும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

கண்ணன் என்பவர் வீடு என்னுடைய வீட்டிற்கு அருகில் இல்லை என்றால் சரியல்ல. அவர் பரமசிவன் என்பவர் வீட்டில் வாடகைக்கு இருந்தார். எதிரிகளின் சமுதாயத்தை அசிங்கமாக பேசி, எதிரிகளை நாங்கள் தாக்கி காயம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. அந்த சம்பவத்தில் கண்ணனும், ஆரோக்கியமும் எனக்கு காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளையும் அந்த ஊரிலிருந்து காலி செய்து அனுப்புவதற்காக நாங்கள் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எனது வீட்டிற்கு எதிரில் எந்த

பிரச்சனையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. கடைக்கு பொருள் வாங்க வந்த 1ம் எதிரியை நானும், ஆரோக்கியம், கண்ணன் ஆகியோர்கள் சேர்ந்து இரத்தக்காயங்கள் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. மருத்துவமனையிலிருந்து நான் தன்னிச்சையாக வெளியேறினேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.02.23 17:37:10 +0530

**தேதி :** 23.02.2026 **SC.No. :** 486/82024 PW :2 கண்ணன்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

அ.சா.1 ஜெயக்குமாரின் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் இரண்டு வீடு தள்ளி உள்ளது. இந்த விபரத்தை நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். சம்பவத்திற்கு முன்பு ஒரு வாய்த்தகராறு ஏற்பட்டதா? என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1 ஜெயக்குமார் மீது காவல்நிலையத்தில் எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. என் மீதும் எந்த வழக்கும் காவல்நிலையத்தில் இல்லை. நான் வீட்டில் இருக்கும் போது சத்தம் கேட்டு வெளியே வந்து பாரத்தபோது சம்பவம் நடந்தது. 108 ஆம்புலன்ஸிற்கு யார் போன் போட்டார்கள் என்றால் நான் போன் செய்தேன். 108 ஆம்புலன்ஸில் அவர் மனைவி சென்றார். நான் அ.சா.1 க்கு உறவினர் என்றால் இல்லை. நானும், அ.சா.1 ம் நாடார் சமுதாயத்தை சேர்ந்தவர்கள். எதிரிகள் முடி திருத்தும் சமுதாயத்தினரை சார்ந்தவர்கள். அவர்கள் 3 பேர்களின் வீடு எங்கள் ஊரில் உள்ளது. எதிரியின் உறவினர்கள் ராஜேந்திரன் என்பவர் சொத்துக்களை விற்று விட்டு வெளியூர் சென்று விட்டார் என்றால் சரிதான். அதற்கான காரணம் அ.சா.1 ஜெயக்குமார் என்றால் சரியல்ல.

எதிரிகளை நாங்கள் சாதியை சொல்லி தாக்கினோம் என்றால் சரியல்ல. நான் அ.சா.1 குடியிருக்கும் தெருவில் நான் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 ற்கு நான் உறவினர் என்பதினால், வேறு தெருவில் குடியிருக்கும் என்னை இந்த வழக்கில்

சாட்சியாக சேர்த்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்தில் எவ்வளவு நேரம் நின்றேன் என்றால் மருத்துவமனைக்கு ஏற்றி விடும் வரை நின்றேன். ஆய்வாளர் என்னை பஸ்ஸ்டாண்டில் வைத்து 13 ம் தேதி விசாரித்தார். நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான், ஆரோக்கியம், ஜெயக்குமார் ஆகியோர்கள் எதிரிகளை தாக்கினோம் என்பதினால் தான் எங்களுடைய உடைகளிலும் எந்த இரத்தக்கறையும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.23 17:37:19 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 486/2024**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜபுஷ்பம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராஜமணி | தொழில் | : | தையல் தொழில் |
| கிராமம் | : | மான்குடி | வயது | : | 45 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 23.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் மான்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் தையல் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஜெயக்குமார் என்னுடைய கணவர். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி பாக்கியத்தாய் அரிசி மூட்டை வாங்கிய வகையில் ரூ.5000/- தரவேண்டியிருந்தது. 12.09.2023 அன்று இரவு 10.30 மணியளவில் நாகராஜ் எங்களுடைய வீட்டு வழியாக செல்லும்போது, என்னுடைய கணவர் அந்த பணத்தை கேட்டார். அப்போது சண்டை வந்தது. பின்னர் எதிரிகள் சென்று விட்டார்கள். பின்னர் இரவு 11.00 மணியளவில் எதிரிகள் அரிவாளுடன் எங்களுடைய வீட்டிற்கு முன்னால் வந்து எதிரி ரமேஷ் அரிவாளால் என்னுடைய கணவரின் தலையில் பல இடங்களில் வெட்டினார். கழுத்தை நோக்கி வெட்டியபோது, கையால் எனது கணவர் தடுத்தார். பின்னர் எதிரி நாகராஜ் சூரி கத்தியால் என்னுடைய கணவரின் முதுகிலும், தோள்பட்டைக்கு அருகிலும் பல இடங்களில் குத்தினார். என்னுடைய கணவர் கீழே விழுந்து விட்டார். பின்னர், திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு என்னுடைய கணவரை

கொண்டு சென்றோம். அங்கு 8 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். எதிரிகள் தேவடியா மவளே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டிக்கொண்டே வெட்டினார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எதிரி நாகராஜ் முதலில் வந்து தகராறு செய்தபோது பக்கத்து வீட்டில் உள்ள நபர்களுக்கு தெரியுமா? என்றால் அவர்கள் தூங்கி விட்டார்கள். என்னுடைய கணவருக்கு கையில் காயம் இருந்ததா? என்றால் உடம்பில் இரத்தம் இருந்ததினால் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. என்னுடைய கணவரின் உடம்பில் இரத்தம் பட்டிருந்ததா? என்றால் முழுவதும் பட்டிருந்தது. என்னுடைய கணவரை யார் தூக்கினார்கள் என்றால் அவராக எழும்பி உட்கார்ந்திருந்தார். 108 ஆம்புலன்ஸில் தான் திருநெல்வேலி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அவருடன் நான் சென்றேன். என்னுடைய கணவரை நான் தூக்க முயற்சி செய்தேனா? என்றால் அந்த அதிர்ச்சியில் நின்றேன்.

சம்பவம் என் வீட்டின் முன்னால் வைத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் நானும், என் கணவரும் முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. போலீசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். என்னுடைய கணவரின் உடைகளை ஆய்வாளர் கைப்பற்றினாரா? என்றால் இல்லை. என்னுடைய கணவரை எதிரிகள் வெட்டிய இடத்தில் இரத்தம் பட்டிருந்ததா? என்றால் இரத்தம் பட்டிருந்தது.

யார் 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார்கள் என்றால் என்னுடைய மகள் போன் செய்தாள். இந்த வழக்கின் சாட்சிகளான கண்ணன், ஆரோக்கியம் என் வீட்டிற்கு அருகில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். முதல் எதிரியின் உறவினர் ராஜேந்திரன் என்பவர் எனது கணவருடன் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக வேறு ஊருக்கு சென்று விட்டார் என்றால் சரியல்ல. கண்ணன், ஆரோக்கியம் ஆகியோர்கள் என்னுடைய கணவரின் நெருங்கிய நண்பர்கள் என்றால் இல்லை, உறவினர்கள். என்னுடைய கணவர் மீது காவல்நிலையத்தில் எத்தனை வழக்குகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தபோது பக்கத்தில் உள்ளவர்கள் வந்தார்களா? என்றால் நான் அலறல் சத்தம் போட்டபோது வந்தார்கள்.

108 ஆம்புலன்ஸிற்கு என் மகள் போன் செய்த விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் சொன்னேனா? என்றால் இல்லை. சம்பவம் எங்களது வீட்டின் முன்பு நடைபெறவில்லை என்றாலும், எனது கணவரும், சாட்சிகள் கண்ணன், ஆரோக்கியம் ஆகியோர்கள் மெயின் ரோட்டின் வழியாக வந்த நாகராஜை தாக்கினார்கள் என்றாலும் சரியல்ல. அவ்வாறு ஏற்பட்ட சண்டையின் போது தான் எனது கணவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் மீதுள்ள வழக்குகள் அனைத்தையும் மறைத்து நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் சிகிச்சை விபரக்குறிப்புகளை முழுமையாக என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு காயம் ஏற்பட்டதா? என்றால் இல்லை.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.02.23 17:37:30 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 486/2024**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆரோக்கியம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஐய்யர் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | மான்குடி | வயது | : | 27 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 23.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் மான்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஜெயக்குமார் என்னுடைய தெருவில் குடியிருந்து வருகிறார். எதிரிகளை எனக்கு தெரியும். 12.09.2023 அன்று இரவு 10.50 மணியளவில் நான் வேலை முடித்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். தெருவில் சத்தம் கேட்டது. நான் வண்டியை நிப்பாட்டி விட்டு என்ன என்று பார்க்க சென்றேன். அப்போது ஜெயக்குமார் வீட்டின் முன்பு எதிரிகள் ஜெயக்குமாரை அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்கள். எதிரி நாகராஜின் மகன் அரிவாளால் ஜெயக்குமாரின் தலையில் 4 இடங்களில் வெட்டினார். தோள்பட்டையிலும் 2 வெட்டு வெட்டினார். நாகராஜ் கத்தியால் ஜெயக்குமாரின் முதுகில் 4 இடங்களில் குத்தினார். பக்கத்திலுள்ளவர்கள் ஆம்புலன்ஸிற்கு போன் போட்டார்கள். நான் இரத்தக்காயங்களை துடைத்து, தண்ணீர் குடிக்க வைத்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய வீடு ஜெயக்குமார் வீடு தாண்டி 20 வீடுகள் தாண்டி உள்ளது. 108 ஆம்புலன்ஸிற்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் நிறைய பேர் தகவல் சொன்னார்கள். ஜெயக்குமாரின் வீட்டிற்கு அருகில் உள்ள நபர்கள் வெளியே வந்தார்களா? என்றால் வந்தார்கள். ஜெயக்குமாரின் காயத்தை நான் துடைத்தபோது, அவர் நினைவுடன் இருந்தாரா? என்றால் இல்லை. அவரின் சட்டையில் இரத்தம் பட்டிருந்ததா? என்றால் பட்டிருந்தது. என்னுடைய கைலியிலும் பட்டது. ஆய்வாளர் என்னை வீட்டில் வைத்து விசாரித்தார். நான் மேற்குறிப்பிட்ட விபரத்தை ஆய்வாளரிடம் சொல்லியுள்ளேன். ஆய்வாளர் என்னுடைய கைலியை கைப்பற்றவில்லை. ஜெயக்குமார் மீது காவல்நிலையத்தில் எவ்வளவு வழக்குகள் உள்ளது என்று எனக்கு தெரியாது.

எதிரி நாகராஜ், ஜெயக்குமார் வீட்டு வழியாகத்தான் ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் சரிதான். எதிரியின் உறவினர் ராஜேந்திரன் என்பவருக்கு ஜெயக்குமாருடன் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக சொத்துக்களை விற்றுவிட்டு வெளியூர் சென்றார் என்றால் அவருக்கு வேலை இல்லாததினால் பிழைப்பு தேடி சென்றார். நானும், கண்ணன், ஜெயக்குமார் ஆகியோர்கள் எதிரிகளை ஊரில் இருக்கக்கூடாது என்று பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. நாகராஜிற்கு 2 கைகளும் ஊனம் என்றால் அவர் 2 கைகளையும் வைத்து பால் கறப்பார். அ.சா.1 மற்றும் என் மீது வழக்குகள் உள்ளது என்றால் சரியல்ல.

நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அதனால் தான் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள யாரும் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றாலும்

சரியல்ல. அ.சா.1 எனது நண்பர் என்பதினால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது 1, 2 எதிரிகளுக்கு இரத்தம் வந்ததா? என்றால் இல்லை.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.23 17:37:41 +0530